வசிக்கும் இப்பகுதிக்கு பட்டா வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, பட்டா வழங்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயத்திலே நலிந்த பிரிவினர்களின் முன்னேற்றத்திற்கு அடிப்படைத் தேவையான வசிப்பதற்கு இடம் வழங்குவதே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசின் முக்கிய கொள்கையாகும். அந்தவகையிலே, ஆட்சேபகரம் அல்லாத அனைத்து இடங்களிலும் பட்டா வழங்கப்பட்டு வருகிறது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கின்ற அந்தக் கருத்தின் அடிப்படையிலே, அது உரிய ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு, மக்கள் நலன் சார்ந்து வைத்திருக்கின்ற அந்தக் கோரிக்கையிலே உடனடியாக 250 குடும்பங்களுக்கும் பட்டா வழங்குவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், ஒப்படை செய்ய எங்கெங்கு நிலம் உள்ளதோ, அங்கு தகுதியுள்ள நபர்களுக்கு வருவாய் நிலை ஆணை எண் 21-ன்கீழ் வீட்டுமனை வழங்கப்பட்டு வருகிறது என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 77, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

77—

அடிப்படை வசதிகள்

***24755—திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2018 மே 29]

(அ) குறிஞ்சிப்பாடி தொகுதி, வடலூர் பேரூராட்சியிலுள்ள வள்ளலார் தெய்வ நிலையத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தினுடைய நிரந்தரப் பொதுச் செயலாளர் மறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா தெய்வத்தை வணங்கி, கழகத்தினுடைய இணை ஒருங்கிணைப்பாளர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், கழகத்தினுடைய ஒருங்கிணைப்பாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அருமை அண்ணன் பாசமிகு ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) கடலூரிலிருந்து 25 கிலோ மீட்டர் தொலைவில் வள்ளலார் தெய்வ நிலையம் அமைந்துள்ளது. இந்தத் திருத்தலம் கடலூர் மாவட்டத்தில் அமைந்துள்ள முக்கிய சுற்றுலாத்தலம் ஆகும். 2008-2009 ஆம் நிதியாண்டில் மாநில அரசு திட்டத்தின்கீழ் வடலூர் சத்திய ஞானசபை மேம்பாட்டிற்காக சிமெண்ட் மற்றும் தார்ச்சாலை அமைத்தல், குடிநீர் வசதி செய்தல், உயர் மின் கம்ப விளக்குகள் அமைத்தல், கழிவறை அமைத்தல், உடை மாற்றும் அறை அமைத்தல் ஆகிய பணிகளுக்காக ரூ.68.41 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டு, செயல்பாட்டில் உள்ளன. மேலும், இத்தலத்திற்கு இந்து சமய அறநிலையத் துறையின்மூலம் தங்கும் வசதி, கழிப்பிட வசதி மற்றும் சமுதாயக்கூடம் போன்ற வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு, பயன்பாட்டில் உள்ளன. எனினும், இனிவரும் காலங்களில் வடலூர் சத்திய ஞானசபைக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் மற்றும் பக்தர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்பட்சத்தில் கூடுதல் அடிப்படை வசதிகள் தேவைப்படின், சுற்றுலாத் துறையின் நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, மாவட்ட ஆட்சி நிருவாகத்தின்மூலம் இந்தப் பணிகள் முடிக்கப்படும் என்பதை இம்மாமன்றத்திற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக பணிவுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள்.

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய செய்திகள், அது எப்போதும் செய்கின்ற பணிகள்தான். கழக அரசு ஆட்சியில் இருக்கும்போது, தலைவர் கலைஞர் அவர்களுடைய உத்தரவின் அடிப்படையில், வள்ளலார் தெய்வ நிலையத்தின் முன் மண்டபம் அமைத்தல் போன்ற அடிப்படை வசதிகளைச் செய்து கொடுத்தோம். இது ஆண்டுதோறும் கிட்டத்தட்ட 50 இலட்சம் மக்கள் வந்து செல்கின்ற கோயிலாகும். மாதர் பூஜையின்போது கிட்டத்தட்ட பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வருவார்கள். அதேபோல, தினந்தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் வந்து செல்கின்ற பகுதியாக இருக்கின்ற காரணத்தினால், இங்கு கூடுதலாக அடிப்படை வசதிகளை செய்து தர வேண்டும்.

முற்பகல் 11-20

குறிப்பாக, அங்கு மூன்று வேளை இலவசமாக உணவு வழங்கப்படுகிறது. தினந்தோறும் நூற்றுக்கணக்கான ஆன்மீகத் தொண்டர்கள் இரவு நேரங்களில் அங்கே தங்குகின்றார்கள். அந்தக் கோயிலில் அவர்களுக்கென்று அடிப்படை வசதிகள் ஒன்றுமில்லை. கழிவறை வசதிகளும் அங்கே இல்லை. குளிப்பதற்குக்கூட அங்கே வசதிகள் இல்லை. ஆனால், தவறான கருத்தை, செய்தியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே சொல்கின்றார்கள். ஆகவே, அங்கே அடிப்படை வசதிகளை கூடுதலாக செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த தெய்வ சபைக்கு, திருஞான சபைக்கு நான் சென்ற காரணத்தினால் கூறுகிறேன். அதாவது, ஜோதி விளக்கு எரிகின்ற இடத்திற்கு எதிரே ஒரு மண்டபம் இருக்கின்றது. அங்கே ஒரு கிணறு இருக்கின்றது. ஆண்டுதோறும் அங்கு நடைபெறுகின்ற திருவிழாக்கள், பூஜைகளில் அந்தக் குளத்திலிருந்து hose pipe மூலம் தண்ணீர் எடுத்து, பல குழாய்களின் வழியாக தண்ணீர் வழங்கப்படுகிறது. வற்றாத கிணறாக அந்தக் கிணறு இருந்து கொண்டிருக்கிறது. அனைவரும் அங்கே குளித்த

2018 மே 29]

பிறகு, ஆடை மாற்றுவதற்குண்டான வசதிகளும் அங்கே இருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அங்கே சுற்றுலா அலுவலர்களை அனுப்பி, ஆய்வுகள் நடத்தப்படும். அந்த ஆய்வுகள் வருகின்ற திங்களில் நடத்தப்படும்போது, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் நேரிலே வருவார்களேயானால், அந்த இடத்திற்கு நேரிலே சென்று என்னென்ன குறைகள் இருக்கின்றனவோ, அவையெல்லாம் வருகின்ற நிதியாண்டில் நிச்சயம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, நிச்சயம் நிறைவேற்றித் தர இந்த அரசு செயல்படும் என்பதைப் பணிவோடு தெரிவித்து அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள்.

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இடத்தை ஆய்வு செய்யும்போது சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் நேரடியாக வந்தால் நாங்கள் ஆவன செய்வோம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே கூறியிருக்கிறார்கள். நாங்கள் வருவதற்கு தயங்குவதில்லை; நான் வருகின்றேன். அங்கு இலட்சக்கணக்கான மக்கள் வந்து செல்கின்றார்கள். 4, 5 கழிப்பறைகள் கட்டிவிட்டால் மட்டும் போதாது. அங்கு இலட்சக்கணக்கான மக்கள் வந்து செல்கின்ற காரணத்தினால், அந்த இடத்தைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டும். அங்கே தினந்தோறும் இரவில் நூற்றுக்கணக்கான பேர் தங்குகின்றார்கள். அவர்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து தர வேண்டிய கடமை இந்த அரசுக்கு உண்டு. அதைச் செய்து தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மேலும், இரண்டு தேசிய நெடுஞ்சாலைகள் இணைகின்ற இடத்தில் இந்தக் கோயில் இருப்பதாலும், அதிகமான மக்கள் வந்து செல்கின்ற காரணத்தாலும், இதனை சுற்றுலா நகரமாக அறிவித்து, அதற்கு வேண்டிய அடிப்படை வசதிகளைச் செய்து தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மேலும், இந்தத் துறையின் மூலமாக இயங்கிக் கொண்டிருக்கின்ற தமிழ்நாடு ஓட்டலையும், தங்குவதற்கான விடுதியையும் அங்கு அமைத்துத் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கூறியதைப்போல், 2011-2012 ஆம் ஆண்டு மாநில அரசின் நிதியுதவித் திட்டத்தின்கீழ், கடலூர் மாவட்டம், சிதம்பரம் முதல் பிச்சாவரம் சாலை, 3/2 முதல் 6/4 கிலோ மீட்டர் வரை மேம்பாட்டுப் பணிகளுக்காக, ரூ.90 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன என்கின்ற தகவலையும் தெரிவித்துக்கொள்கிறேன். மைய அரசின் நிதித் திட்டத்தின்கீழ், 2004-2005 ஆம் ஆண்டில் பிச்சாவரம் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, ரூ.104.50 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு, படகுக் குழாம் அமைத்தல், நான்கு குடில்கள் கட்டுதல், கடல்சார்ந்த பகுதிகளில் சுற்றுலா ஓய்வறைகள் அமைத்தல் ஆகிய பணிகள் முடிவுற்று, பயன்பாட்டில் உள்ளன. அதேபோன்று, 2005-2006 ஆம் ஆண்டு, மைய அரசு நிதியுதவித் திட்டத்தின்படி, ஆதி சங்கரர் சுற்றுச்சாலை திட்டத்தின்கீழ், சிதம்பரம் மேம்பாட்டிற்காக 192.50 இலட்சம் ரூபாய் ஒப்பளிக்கப்பட்டு, சிதம்பரத்தில் 4 திசைகளிலும் வாகனம் நிறுத்துமிடம் அமைத்தல், காந்தி பூங்கா மேம்பாடு, நடைபாதை அமைத்தல், பேருந்து நிலையம், கடிகார அடுக்ககம் புதுப்பித்தல், அறிவிப்புப் பலகை 4 திசை தெருக்களிலும் அமைத்தல் மற்றும் குடிநீர் வசதிகள் செய்தல் ஆகிய பணிகள் முடிவுற்று, செயல்பாட்டில் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியபடி, தெய்வ சுற்றுலாத் தலமான அந்த இடத்தில் தமிழ்நாடு ஓட்டல் அமைக்க வேண்டும் என்கின்ற கோரிக்கையை இங்கே வலியுறுத்திப் பேசினார்கள். அந்த இடத்தில் சுற்றுலா அலுவலர்கள் மூலம் ஆய்வினை மேற்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்து வைத்திருக்கின்ற கோரிக்கையை நிச்சயம் நிறைவேற்றித் தர மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களின் ஆலோசனையைப் பெற்று, நிதிநிலைக்கேற்ப செய்து தர ஆவன செய்வோம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 11-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 78, மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*